(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 404.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 ஒற்றோபர் 29, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3276/12

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 - 2012 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் உலக வங்கியினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள், கொடைகள் ஆகியவற்றின்

(i) பெறுமதிகள் எவ்வளவு என்பதையும்;

(ii) கடன்களுக்கான காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iii) சராசரி வட்டிச் செலவு எவ்வளவு என்பதையும்;

(iv) கடன்கள் மற்றும் கொடைகள் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் அல்லது கருத்திட்டங்கள் எவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3689/ '13

2.

கௌரவ அனுர திஸாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2012 ஆம் ஆண்டில் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி குழுவினர்கள் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத, பகுதியளவில் பயிற்றப்பட்ட நடுத்தர மட்டம், எழுதுவினைஞர், விமானப் பணிப்பெண் மற்றும் வேறு எனும் வகைப்படுத்தலின் கீழ் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) வெளிநாடு சென்றுள்ள மேற்படி குழுவினரில் உள்ளடங்கும் பெண்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி (ii) இல் ஒவ்வொரு வகையின் கீழ் வரும் பெண்களின் எண்ணிக்கை, குறித்த ஆண்டில் வெளிநாடு சென்றுள்ள பெண் ஊழியர்களின் எண்ணிக்கையின் சதவீதமாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3959/ '13

3\.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) கண்டி மாநகர சபையினால் கொஹாகொட பிரதேசத்தில் அகற்றப்படும் குப்பை கூளங்கள் மற்றும் கழிவுப் பொருட்களை முகாமைத்துவம் செய்தல் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர் களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் தனித் தனியாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் பிறிதொரு நிறுவனத்தில் பதவியொன்றை வகிக்கின்றாரா என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனம் கம்பனிகள் பதிவுச் சட்டத்தின் கீழ் அல்லது வேறொரு நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந் நிறுவனங்களின் பெயர்கள் அல்லது நிறுவனத்தின் பெயர் மற்றும் பதிவு இலக்கம் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்திற்கும் கண்டி மாநகர சபைக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள குத்தகை உடன்படிக்கையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா;

(ii) மேற்படி குத்தகை உடன்படிக்கையில் உள்ளடங்கியுள்ள நிபந்தனைகள் யாவையென்பதையும்;

(iii) உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டுள்ள மற்றும் தவறவிடப்பட்டுள்ள நிபந்தனைகள் யாவை என்பதையும்;

(iv) நிபந்தனைகள் மீறப்பட்டிருப்பின், அதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4179/ '13

4\.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— வன சீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லுணுகம்வெஹெர, மாதுறுஓயா மற்றும் உடவலவை வனப்பூங்காக்களினுள் மாடுகள் அவிழ்த்துவிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ii) மேற்படி வனப் பூங்காக்களினுள் எவ்வாறு மாடுகள் நுழைய விடப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) வனப்பூங்காக்களினுள் மாடுகள் அவிழ்த்து விடப்பட்டுள்ளமை பற்றி வன சீவராசிகள் உத்தியோகத்தர்கள் அறிந்துள்ளார்களா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே கூறப்பட்டவாறு வனப் பூங்காக்களினுள் மாடுகளை நுழைய விடுவதற்காக மின்வேலிகள் சேதமாக்கப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(ii) இவ்வாறான செயற்பாடுகள் பற்றிய ஏதேனும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4635/ '13

5\.

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விவசாய விதை வகைகளை இறக்குமதி செய்வதற்காக 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை தனித் தனியாக யாதென்பதையும்;

(ii) வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற கலப்பின (Hybrid) விதை வகைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி விதை வகைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்யுக்கூடிய இயலுமை காணப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி விதை வகைகளை உற்பத்தி செய்வதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது நாட்டினுள் உற்பத்தி செய்யப்படுகின்ற கலப்பின விதை வகைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு விதை வகையினதும் தற்போதைய உற்பத்தியின் மூலமாக நிறைவேற்றக்கூடிய உள்நாட்டுத் தேவை அளவு ரீதியில் எவ்வளவென்பதையும்;

(iii) கலப்பின விதை வகைகளுக்கான மொத்த தேவையை உள்நாட்டு ரீதியிலேயே நிறைவேற்றிக் கொள்வதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4736/ '14

6\.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் லாஹுகல கிராமத்திலுள்ள லாஹுகல மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நடாத்தப்படும் வகுப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அதிபர் உள்ளடங்கலாக ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) லாஹுகல கிராமத்தின் சிறுவர்களுக்கு கல்வி புகட்டுவதற்காகவுள்ள ஆரம்பப் பாடசாலை யாதென்பதையும்;

(ii) அண்மையில் அப்பாடசாலை சம்பந்தமாக எழுந்துள்ள பிரச்சினை யாதென்பதையும்;

(iii) மேற்படி கிராமத்திற்கு கிழக்கு மாகாண சபையின் அனுமதியுடன் அண்மையில் ஆரம்பப் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டதா என்பதையும்;

(iv) அப்பாடசாலையின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாடசாலைகள் மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்பட்ட போதிலும் பொதுவாக இப்பாடசாலைகளில் சிறார்கள் தடங்கலின்றி கல்வி பயில்வதற்கான வசதிகளை வழங்குதல் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில். மேற்படி பாடசாலைகளில் தற்போது நிலவும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4744/ '14

7.

கௌரவ அசோக் அபேசிங்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் உள்ள மின்சார வசதி இல்லாத வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மின்சார நீடிப்பு மூலம் மின்சார வழங்கலைப் பெற்றுக்கொடுப்பதற்குள்ள இடங்களுக்கு மின்சார நீடிப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) குறைந்த மின்சார கொள்ளளவை கொண்டுள்ள நகரங்களின் மின்சார கொள்ளளவை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5032/ '14

8.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் தற்சமயம் காணப்படும் எருமை மாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அதிகளவு எருமை மாடுகள் காணப்படும் ஐந்து மாவட்டங்களும் ஒழுங்கு வரிசைப்படி யாவை என்பதையும்;

(iii) அரசாங்க பண்ணைகளில் வளர்க்கப்படும் எருமை மாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) இலங்கையில் வளர்க்கப்படும் எருமை மாடு வகைகளின் (breeds) பெயர்கள் யாவை என்பதையும்;

(v) வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும் தயிர் லீற்றர்கள் எவ்வளவென்பதையும்;

(vi) எருமை மாடுகளின் பாலும், பசு மாடுகளின் பாலும் போசாக்கின் அடிப்படையில் ஒன்றுக்கு ஒன்று வேறுபடுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உள்நாட்டு பால் உற்பத்தியின் பொருட்டு எருமை மாடுகளை வினைத்திறன்மிக்க விதத்தில் பயன்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) எருமை மாடுகள் பற்றிய கருத்திட்டத்திற்கென 2013 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3313/ '12

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றுள்ளவாறாக நட்சத்திர வகுப்பு அடிப்படையிலுள்ள ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கையினையும்;

(ii) வருடத்திற்கான அறை இரவுகளின் எண்ணிக்கையினையும்;

(iii) வருடாந்த அடிப்படையில் கடந்த 3 வருடங்களிற்கான கடந்துசெல்லல் வருகைகளின் எண்ணிக்கையினையும்;

(iv) சுற்றுலாப் பயணி ஒருவரினால் இலங்கையில் செலவழிக்கப்பட்டும் சராசரித் தொகையினையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் போது விதிக்கப்படும் சகல வரிகளையும்;

(ii) கடந்த 3 வருடங்களில் ஒவ்வொரு வரியினாலும் ஈட்டப்பட்ட தொகையினை வெவ்வேறாக வருடாந்த அடிப்படையிலும்

அவர் கூறுவாரா

(இ) இன்றேல், ஏன்?

3940/ '13

10.

கௌரவ அனுர திஸாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு 500 மீற்றர் அண்மித்ததாக நடாத்தப்பட்டு வருகின்ற மதுபான சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி மதுபான சாலைகளுக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளவர்கள் யாவர் என்பதையும்;

(iii) மதுபான சாலைக்கான உரிமப் பத்திரம் வழங்கும் போது பாடசாலைகள், பன்சாலைகள் உள்ளிட்ட புனித தலங்களிலிருந்து மதுபான சாலைகளுக்கு இருக்க வேண்டிய திட்டவட்டமான தூரம் எவ்வளவென்பதையும்;

(iv) இத்தகைய உரிமப் பத்திரங்களை வழங்கும் போது ஆராயப்படுகின்ற ஏனைய வரையறைகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி (iii) மற்றும் (iv) வது விடயங்களில் குறிப்பிடப்பட்ட வரையறைகளுக்கு ஏற்ப தலதா மாளிகைக்கு அண்மையில் அமைந்துள்ள மேற்படி மதுபான சாலைகள் சட்டவிரோதமானவையா என்பதையும்;

(vi) இதற்கமைய, மேற்படி மதுபான சாலைகள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3963/ '13

11.

கௌரவ புத்திக பதிரண,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) கண்டி மா நகர சபையின் கொஹாகொடையில் கழிவுகளை அகற்றுவதற்காகப் பயன்படுத்தப்படும் இடத்திலிருந்து உருவாகும் கசிவுத் திரவம் மகாவலி கங்கையுடன் சேர்கின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி இடத்திலிருந்து வெளியேறும் கசிவுத் திரவத்தின் பீ.எச்.பெறுமதி, மின் கடத்துதிறன், தெளிவுத்தன்மை, வெப்பம், எண்ணெய் மற்றும் மசகு, உயிர் ஒட்சிசன் கேள்வி (BOD) மற்றும் இரசாயன ஒட்சிசன் கேள்வி (COD) ஆகிய பௌதீக மற்றும் இரசாயனப் பண்புகளுக்கு ஏற்புடையதான பெறுமதிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி கசிவுத் திரவத்தில் உள்ளடங்கியுள்ள குரோமியம், கெட்மியம், ஈயம் மற்றும் பாதரசம் ஆகிய கன உலோகங்களினதும் பொசுபேட் மற்றும் நைட்ரேட் ஆகிய ஆக்கக் கூறுகளினதும் உள்ளடக்கம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கொஹாகொட குப்பை மேட்டின் காரணமாக மகாவலி கங்கையில் தொடர்ச்சியாகச் சேர்கின்ற கன உலோகப் பொருட்களைக் கொண்ட கசிவுத் திரவம் நிலக் கீழ் நீர்த் தொகுதியுடன் சேர்வதானது பாதகமானதொரு நிலைமையாகுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில் இந் நிலைமையைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4418/ '13

12.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முதலாம் தர தாதியர் போதனாசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை 2013ஆம் ஆண்டில் நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பரீட்சை நடாத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு இருக்க வேண்டிய குறைந்தபட்ச தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) விண்ணப்பித்தவர்களில் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

கௌரவ அசோக் அபேசிங்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) குருணாகல் மாவட்டத்தில்,

(i) நெல் கொள்வனவு செய்வதற்காக தாபிக்கப்பட்டுள்ள நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நெல் களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சிய வசதிகள் எவ்வளவு உள்ளன என்பதையும்;

(iii) நெல் விளைச்சலில் அரசாங்கம் கொள்வனவு செய்யும் நெல்லின் அளவு எத்தனை சதவீதமென்பதையும்;

(iv) நெல் விளைச்சலை அதே மாவட்டத்தினுள் அரிசியாக்கி விநியோகிப்பதற்கான திட்டமொன்றை தயாரிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015) — (ஒதுக்கப்பட்ட நான்காம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஒற்றோபர் 24) [1].

* 2.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 3.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 2013.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2013.09.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின், 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 14.

சுகாதார அமைச்சர்,— அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2011,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2014.01.21 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.04.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 15.

தொழிநுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழிற்துறைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 திசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 16.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 17.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 18.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 19.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 20.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் சட்டத்தின் 36(4) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 21.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபைச் சட்டத்தின் 29(5) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 22.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகார சபைச் சட்டத்தின் 34(2) ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 23.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 24.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை-2011,— 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 25.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சீ. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

26.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

27.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

28.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

29.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

30.

கல்பவுருக்ஷ சங்வர்தன பதனம (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

31.

ஸிவ்முனி ஸே வெஹர பௌத்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

32.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.